Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Sep. 2011





**Preachers' Meeting in Kanyakumari**



**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்



**உங்கள் தொலைக்காட்சியில்**



TAMILAN TV
EVERY Monday 6.00 - 6.15 a.m
Z TAMIL TV
EVERY Wednesday 5.45 - 6.00 a.m

BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041

E-mail: arjunglory@yahoo.co.in
Website: thewordofchristsouthindia.com

Postal Address:
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
**B. அர்ஜுனன்**

மரம் 11 செப்டம்பர் 2011 கனி 10

## LEBANON - லீபனோன்

- ❑ வெள்ளை மலை என்றழைக்கப்படுகிறது.
- ❑ எர்மோன் மலைக்கு இடைப்பட்ட பள்ளத்தாக்கு லீபனோன் - யோசு.12:5-7.
- ❑ லீபனோனில் உயரமும், ஓங்கலுமான கேதுருமரங்கள் உள்ளன - ஏசா.2:13.
- ❑ சாலோமோன் லீபனோனின் மரங்களால் ஆலயத்தையும், மாளிகையையும் கட்டினார் - 1இரா.5:14; 7:2,5.
- ❑ இஸ்ரவேலின் மலைநாடும் மத்தியதரைக்கடலின் சமபூமியுமாகிய இது பனிமூடிய சிகரம் என அழைக்கப்படுகிறது - எரே.18:14.
- ❑ பலவகையான செடிகளும் மிருகங்களும் இருக்கிற இடமாக லீபனோன் இருந்தது.
- ❑ இதனுடைய அழகும் பழங்கள் நிறைந்ததுமான இந்த இடம் பிரபலமானதாக இருந்தது.








## கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக

### உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்


சகோ. பிரபாகரன்
நாமக்கல் மாவட்டம்
9597860409


சகோ. கோவிந்தராஜன்
தஞ்சை மாவட்டம்
9952685685


சகோ. மாயாண்டி
மதுரை மாவட்டம்
9159795725


சகோ. ராஜாமணி
திருநெல்வேலி மாவட்டம்
9940841932


சகோ. டேவிட்
சேலம் மாவட்டம்
9597352233


சகோ. ராஜசெல்வம்
கன்னியாகுமரி மாவட்டம்
9487954973


சகோ. பிளசன்
நாகை மாவட்டம்
9092171897


சகோ. ராம்ராஜ்
திருப்பூர் மாவட்டம்
9487043077


சகோ. யோவான்
விழுப்புரம் மாவட்டம்
9940487200


சகோ. ஜோதி
தேனி மாவட்டம்
9843837498



# வேத அறிவுப் போட்டி எண் : 133

போட்டியாளர்கள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. அதிபதிகள் வாங்குகிற படியை வாங்காமல் என் தேவனே... எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும் என்று வேண்டிக்கொண்டவன் யார்?
2. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தவருடைய நாமம் என்ன?
3. எஸ்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தவன் யார்?
4. இயேசுவினிடத்தில் கொண்டுவரப்பட்ட பிசாசு பிடித்திருந்த அநேகரை குறிப்பாக அவர் அந்த ஆவிகளை எப்படி துரத்தினார்?
5. தோலையும் சதையையும் எனக்குத் தரித்து, எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர் என்ற தாசன் யார்?
6. யூதர்கள் தேவாலயத்திலே யாரைப் பிடித்துக் கொலைசெய்யப் பிரயத்தனம் பண்ணினார்கள்?
7. யாக்கோபு காமின் தேசத்திலே எப்படியிருந்தான்?
8. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளா?
9. கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, எதைச் சேதப்படுத்துகிறான்?
10. நாம் எவர் மூலமாய் உண்டாயிருக்கிறோம்?



கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக

உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்


சகோ. ஜான் எஸ். நாதன்
திருவள்ளூர் மாவட்டம்
9444443378


சகோ. வல்கனோ பிலிப்பு
சென்னை மாவட்டம்
9710929234


சகோ. அர்ஜுனன்
திண்டுக்கல் மாவட்டம்
9443558041

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

"The Churches Of Christ Salute you"
Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

சிறுவர் பகுதி

## எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று நம்பிக்கை அற்றுப்போயிற்று

### வேதபகுதி:எசேக்கியேல் 37:1-14



எலும்புக்கூடு பார்த்திருக்கிறீர்களா? பள்ளி ஆய்வுக்கூடத்தில் பார்த்து இருப்பீர்கள். அம்மாதிரியான உலர்ந்துபோன எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவிலே எசேக்கியேல் தீர்க்கதரிசியை கர்த்தர் கொண்டு போனார். நீங்களா இருந்தா, பார்த்து பயந்து போயிருப்பீங்க. எசேக்கியேல் தீர்க்கதரிசியை அந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கை சுற்றி நடக்கப்பண்ணினார். பின்பு, மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு எசேக்கியேல்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றான்.

அப்பொழுது கர்த்தர் நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து அவைகளைப் பார்த்து உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.நான் உங்கள்மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத்தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன் அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார். அந்தப்படியே எசேக்கியேல் சொல்ல ஒரு இரைச்சல் உண்டாகி ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்து அவர்கள் உயிரடைந்து காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

இஸ்ரவேலருக்கு பாடம் புகட்டவே கர்த்தர் இவ்விதமான காரியத்தை எசேக்கியேலுக்கு முன்பாக நடப்பித்தார். நம்மில் அவிசுவாசமுள்ளவர்களாக இருப்பவர்களுக்கும் இது பாடமாக அமையும். இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்கிறார்கள். நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன். அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் என்றார். செத்து நாலு நாட்களான லாசருவை நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கல்லறையிலிருந்து எழுப்பினார் அல்லவா?

இந்த இஸ்ரவேலர்களைப் போல எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று, எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று, நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்று அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். உலர்ந்து போன எலும்புக்கு உயிர் கொடுக்கும் தேவன் நம் கர்த்தர். அவர்மீது அசையாத நம்பிக்கை வைக்க வேண்டும். வைப்பீர்களா!

**மனப்பாட வசனம்**
**“என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்” – எசேக்கியேல்37:14**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 11 செப்டம்பர் - 2011 கனி - 10


ஆசிரியவுரை

# கடிந்துகொள்ளுதல்
# Rebuke



கடிந்துகொள்ளுதலை பொதுவாக அநேகர் விரும்பமாட்டார்கள். ஆனால் **கடிந்துகொள்ளுதலைப் பற்றி வேதாகமம் போதிக்கிறது.** அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதும்போது “விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்” என்று எழுதுகிறார் (தீத்து 1:14). விசுவாசகுடும்பத்தார்கள் விசுவாசவிஷயத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றால் ஊழியக்காரர்கள் அதாவது போதகர்கள் அவர்களை கண்டிப்பாய் கடிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. கண்டிப்பு இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போய்விடுவார்கள். ஆகையால் அவர்களை கடிந்துகொள்வது அவசியம். மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தேடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்” என எழுதுகிறார் (2தீமோ.4:2-4). சிலர் கடிந்துகொண்டு போதிக்க தவறிவிடுகின்றனர். ஆகையால் விசுவாசிகள் தவறான காரியங்களில் வளர்ந்துபெருகிவிகிறார்கள். ஆகையினாலே சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு என்கிறார் பவுல். ஒரு போதகனுக்கு உக்கிரான உத்தியோகம்

கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய ஊழியத்தை அசதியாய் செய்யாமல் ஜாக்கிரதையுள்ளவனாக செய்யவேண்டியவனாயிருக்கிறான். அவனைக் குறித்தும் அவனுடைய உபதேசத்தைக் குறித்தும் எப்பொழுதும் எச்சரிக்கையுள்ளவனாயிருக்கவேண்டும். “பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்; கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்” (யூதா 9) பிரதான தூதன் பிசாசை குற்றப்படுத்த துணியாமல், கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொல்வதை வாசிக்கிறோம். கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலுக்கு விட்டுவிட்டான். நாமும் இந்தவிதமாக சிலரை வசனத்தின் மூலம் கடிந்துகொண்டு புத்திசொல்லவேண்டும் அல்லது கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலுக்கு விட்டுவிடவேண்டும். புதிய ஏற்பாட்டு காலத்தில் மனந்திரும்பிய மாயவித்தைக்காரனைக்குறித்து அப்.8-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அவன் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதை மாயவித்தைக்காரனாயிருந்த சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து, நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி; தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது என்று சொல்லி; உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால் இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றான். அன்பானவர்களே, மனந்திரும்பிய மாயவித்தைக்காரனாகிய சீமோனின் துணிச்சலை பேதுரு கடிந்து கொண்டார். இல்லையேல் பணத்தினாலே பரிசுத்தஆவியின் வரத்தை சம்பாதித்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்திருப்பான். ஆகையால், நீ துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள் ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றார். இன்றைக்கும் இப்படிப்பட்ட தவறான எண்ணமுடையவர்களை நாம் காண்கிறோம். அப்படிப்பட்டவர்களை கடிந்துகொண்டு போதிக்கவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு.

**கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவேண்டுமா?** ஆம், ஞானமுள்ள காது கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும். “ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்” என சாலொமோன் குறிப்பிடுகிறார் (பிர.7:5). மூடரின் பாட்டு என்னத்திற்கு ஒன்றுக்கும் உதவாமற்போகும் ஏட்டு சுரைக்காயைப்போல இருக்கும். ஆனால் ஞானியின் கடிந்துகொள்ளுதல் நமக்கு நன்மையைக் கொண்டுவரும். மேலும்,



தேவபிதாவும் அவனின் அவசியமான பாதுகாப்பிற்காக பயமின்றி பத்திரமாக வாழ்ந்திட தனிமைபடுத்தப்பட்ட அவனுக்கு “தனிமையானவர்களுக்கு வீடு, வாசல் ஏற்படுத்தி சங்.68:6. அவரே வாசலாக இருந்து அவனது வீட்டில் உள்ளவர்களுக்கு ஆசிர்வாதத்தை வழங்கினார் (ஆதி.4:7). அவர்கள் அவருக்கு பக்தியுள்ள ஆராதனை செய்தனர், ஜீவ பலியை செலுத்தினர். “நான் சாவாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செயல்களை அறிவிப்பேன்” சங்.118:17. நீதிமானாகிய ஆபேல் தன் அகாலமரணத்திலே நம்பிக்கையுடையவனாக” நீதி.14:32 மிகச் சொற்பகாலமே வாழ்ந்து காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தி தேவனே சாட்சியளிக்கும்படி வாழ்ந்து அவன் மரித்து (இன்றும்) இன்னும் பேசுகிறான்” எபி.11:4 தேவன் ஆதாமையும் அவனின் கீழ்ப்படியாத அவிசுவாசமான சந்ததியாரை வெறுக்காமல், மறக்காமல், இன்றும் நேசித்து, ஆசிர்வதிக்க விரும்புகிறார். அவர்களை கண்ணின் மணிகளைபோல காப்பாற்றுகிறார். பாவியான மனிதன், பரிசுத்தமடைந்து தான் இழந்துபோன ஆதிமேன்மையையும், தேவ அன்பையும் ஐக்கியத்தையும், தேவமகிமையையும் இன்றே பெற்றிடமுடியும்!

நம்மை மறுபடியும் பரலோக தேவனிடத்தில் சேர்க்கும்படியாக, நமக்கு விடுதலை, (இரட்சிப்பு) மீட்பு அளிக்க, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்து, தமது பரலோகபிதாவின் சித்தத்தை நிறைவேற்றிடவும் நம்மில் அன்புகூர்ந்து இன்முகத்துடன் நாம் சுமக்க வேண்டிய ஈனச் சிலுவையை ஏளனம் செய்தோரிடையே சிலுவையை சுமந்து கல்வாரி நாயகன் நகரத்திற்கு புறம்பே நமக்காக பாடுபட்டு குருதிசிந்தி கோரமரணமைடைந்தார். இதனை சாத்தானும் அவனின் கூட்டத்தாரும் கூடி மகிழ்ந்தனர். ஆனால் மூன்றாம் நாள், தாம் சொன்னபடியே வெற்றிவேந்தராக இயேசு கிறிஸ்து முன்னறிவித்தப்படியே உயிர்த்தெழுந்தார். இதனால் அவர் விண்ணிலும், மண்ணிலும் மகிமைப்படுத்தப்பட்டார்.

நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் ரோம.13:32 (சங்.2:7). இயேசுவை (தேவன்) எழுப்பினதினாலே மரணத்தினின்று முதன்முதலாக அழிவை காணாமல் (ஜெநிப்பித்ததினாலே) உயிர்த்தெழுந்ததினாலே, தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவருடைய பிள்ளையாகிய இயேசு நமக்கு நிறைவேற்றினார் அப்.13:33. முதல் ஆதாமின் பாவ சந்ததியானவர்களாகிய நாம் இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவைப்போல், அவர் தேவனுக்கு கீழ்ப்படிந்ததைப்போல நாமும் கீழ்ப்படிந்தால் தேவபிதாவானவர் நம்மையும், கீழ்ப்டிகின்ற அனைவரையும் நோக்கிப்பார்த்து “இவன் என் நேசகுமாரன் இவனில் நான் பிரியமாயிருக்கிறேன்” என்று கூறுவதுடன் நம்மை மகிமைப்படுத்தி, நாம் இழந்த எல்லா மேன்மையையும் அதிகாரத்தையும் அளிக்க விரும்புகிறார்.

தேவனுடைய சுவிசேஷத்தை கேட்டு, மனந்திரும்பி, விசுவாசித்து பாவ அறிக்கை செய்து நமது பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்தராகி, பரிசுத்த ஆவியின் வார்த்தை, பெலத்தை பெறலாம். அவரும் நம்மை அவருடைய பிள்ளையாய் ஏற்றுக்கொள்ள விரும்புவதால் “நாம் புத்திரராயிருக்கிறபடியால், அப்பா abba அரேமிய வார்த்தைக்கு அப்பா என்று பொருள் படும். இவ்வார்த்தை மேலும் இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளது. மாற்.14:36; ரோம.8:15; கலா.4:6. சத்தியத்திற்கு கீழ்ப்படிந்த நாள் முதற் கொண்டு நாம் அடிமைத்தனத்தின் ஆவியைப்பெறாமல் அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற சுவிகாரத்தின் (abba) ஆவியை (விடுதலையின் ஆவியை) அதிகாரத்தை பெறுகிறோம் (ரோம.8:15) இதனைக் குறித்து பரிசுத்த ஆவியானவரும்

# தெரிந்துகொள்வோம்

சரித்திர ஆய்வு

# ஒரே

**தேவன்**
**கர்த்தர்**
**அஸ்திபாரம்**
**சுவிசேஷம்**
**மந்தை**
**சபை**
**பலி**

**John S.Nathan** Gospel Minister
cell:9444443378

பரலோகத்திலுள்ள நமது பரிசுத்த தேவன், உலகத்தோற்றமுதற்கொண்டு உலக முடிவுமட்டும் பிறந்து வாழும் மக்களினத்திற்கு பரலோகத்தின் பரிசுத்த பிதாவாக இருக்கிறார். எனவே நீ தேவனுடைய சொந்தமான பிள்ளை, உனக்காவே அவர் உலகத்தில் காணக்கூடியவைகள், காணக்கூடாதவைகள் அனைத்தையும் உண்டாக்கி, உனக்கு எல்லாவற்றையும் இலவசமாகவே வழங்கிடவிரும்பினார். பின்பு தேவன்: தமது சாயலாகவும் (பிதா, குமாரனின்) நமது சாயலாகவும் நமது (தமது) ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி.1:26) ஏதேனில் ஆதாம் மற்றும் ஏவாளுக்காகவே எல்லாவற்றையும் சிருஷ்டித்தபின் "...நீ தோட்டத்திலுள்ள சகல (எல்லா) விருட்சத்தின் (மரத்தின்) கனியையும் புசிக்கவே புசிக்கலாம்" ஆதி.2:16. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல (எல்லா) பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" ஆதி.1:26. அவர்கள் அவைகளை ஆளும் அதிகாரத்தையும் பெற்றனர். ".... நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" ஆதி.1:28. வானம், பூமி இவைகளில் உள்ளவைகளை அவரின் "வார்த்தையினால்" உண்டாக்கினார், (2-ம்) தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்; வெளிச்சம் உண்டாயிற்று (ஆதி.1:3). ஆனால் மனிதனை சிறப்பானவனாக தன்னுடனே கூட இருக்க அவனை பூமியின் மண்ணினாலே (அவரைப்போலவே) உருவாக்கி, (தன்னுடைய) ஜீவ சுவாசத்தை (ஜீவனை) அவன் நாசியிலே ஊதினார்; (தனது ஜீவனை அவனுக்களித்தார்) ஆதி.2:7. எனவே மனிதர்களாகிய நாம் அனைவருமே தேவசாயலாகவே சிருஷ்டிக்கப்பட்டோம். ஆதி.1:27. ஏனெனில் நாம் அவரைப்போலவே அவருடைய ரூபத்தின்படியே ஆவியின் சாயலில் உண்டாக்கப்பட்டோம். (நல்லவேளை, மக்களினம் பயப்படும்படியாய் அவருக்கு பலகைகளோ, பலமுகங்களோ, கண்களோ இல்லை) ஆகையால்தான், அவர் நமது ஒரே தேவன், என அழைக்கப்படுவதால் அவரும் நாமும் மேன்மைபாராட்டி மகிழும்படியாய் உள்ளோம். ஏதேன் தோட்டத்தில் பாவத்தில், சாபத்தில், பரிசுத்தத்தை இழந்துபோன ஆதிதம்பதியர் ஆதாம், ஏவாள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் சாத்தானுக்கும், மரணத்திற்குமுள்ளானர். இத்துடன் பரிசுத்தமுள்ள தேவனுடன் உள்ள உறவு உரிமை அனைத்தையும் இழந்தனர், என்ற போதிலும் அவர்களின் நிர்வாணத்தை மறைத்திட தேவன் அவர்களுக்கு தோலாடை உடுத்தினார். ஆதி.3:2. தேவபிதாவோடிருந்து "அவர் (அளிக்க இருக்கும்) இரட்சிப்பின் வஸ்திரத்தை (உனக்கு) எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை" (ஏசா.61:10) உடுத்தி மகிழவேண்டியவன், தேவனுடன் இருக்கவேண்டியவன் தோலாடையுடனே துக்கத்துடனே, கண்ணீருடனே, அவமானத்துடனே எல்லா இன்பத்தையும் இழந்து துன்பத்தை, மரணத்தை சுமந்து கொண்டு தேவ சந்நிதியை விட்டகழ்கின்றான்.



பரியாசக்காரனைக் கண்டிக்கிறவன் இலச்சையடைகிறான்; துன்மார்க்கனைக் கண்டிக்கிறவன் தன்னைக் கறைப்படுத்திக்கொள்ளுகிறான். ஆகையால் பரியாசக்காரனைக் கடிந்துகொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான்; ஞானமுள்ளவர்களைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான் என்கிறார். உண்மைதான் பரியாசக்காரனைக் கடிந்துகொள்வதால் அவன் தன்னை மாற்றிக்கொள்ளான். மாறாக, நம்மையே பகைக்க ஆரம்பித்துவிடுவான் அல்லவா, நாம் ஞானமுள்ளவர்களை கடிந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்கள் ஞானத்தில் மேலும் தேறுவார்கள். "மறைவான சிநேகத்தைப்பார்க்கிலும் வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது" என காண்கிறோம் (நீதி.27:5). உங்களுடைய சிநேகம் எப்படிப்பட்டது? உங்களுடைய கடிந்துகொள்ளுதல் எப்படிப்பட்டது?

கடிந்து கொள்ளுதலை அலட்சியம் செய்கிறவர்கள் பின் நாட்களில் மிகவும் வேதனைப்படுவார்கள். எப்படியெனில்; "முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து; ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம்பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம்பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய்" என நீதி.5:11-14 வரை உள்ள வசனங்களில் படிக்கிறோம். காலம்சென்ற நாட்களில் அநேகர் முறையிடுவது இவைகளைத்தான். நல்ல நாட்களில் அதாவது வயதுள்ள நாட்களில் ஞானவான்களின் கடிந்துகொள்ளுதலைக் கேட்டு தம்மை சரிசெய்துகொண்டு கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்யவேண்டும். கடைசி நாட்களில் முறையிட்டு நாம் ஒன்றையும் சாதிக்கமுடியாது என்பதை அறியவேண்டும். பொதுவாக நாட்களை விரயம் செய்து விட்டு கடைசி நாட்களில் சிந்திப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே, இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் நேயரே, கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு உங்களுடைய ஜீவியத்தை மாற்றியமைத்துக்கொண்டு, கர்த்தர் கொடுத்த இந்த வாழ்க்கையை அவருடைய மேய்ச்சலின் கீழ்வாழ்ந்து, மெய்யான மேய்ச்சலைக் கண்டடைந்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**வேதாகமம் நம்முடைய நன்மைக்காகவே நம்மை கடிந்துகொள்ளுகிறதா?** ஆம், நம்முடைய நன்மைக்காவே நம்மை கடிந்துகொள்ளுகிறது. "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்" (நீதி.3:11,12). அவர் நம்மிடத்தில் அன்புகூருகிறபடியால் அவர் நம்மை கடிந்துகொண்டு சிட்சிக்கிறார். நம்முடைய நன்மைக்காகவே அவைகளைச் செய்கிறார். ஆகையினாலே நீ சோர்ந்துபோகாதே.

நம்முடைய பெற்றோர்கள் நம்முடைய நன்மைகாகவே சிலவேளைகளில் நம்மை கடிந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட கடிந்து கொள்ளுதலை நாம் அலட்சியப்படுத்துகிறோமா? இல்லையே அதற்கு கீழ்ப்படிகிறோமல்லவா, அதைப் போல கர்த்தர் அவருடைய வசனத்தின் மூலமாக நம்மை கடிந்துகொள்ளும்போது அவைகளை ஏற்றுக்கொண்டு மனந்திரும்பவேண்டும். மேலும், அவர் சொல்லுகிறார்; “நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு” என்கிறார் (வெளி.3:19). ஆண்டவர் நம்மை நேசிக்கிறார் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல எல்லோரும் மனந்திரும்பவேண்டும் என்று நீடியபொறுமையோடிருக்கிறார் என வாசிக்கிறோம். நம்மை நேசித்து நமக்கு ஆலோசனை கொடுக்கிற ஒருவர் நமக்கு இருக்கும்போது நாம் ஏன் கலங்கவேண்டும். அவருடைய கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு மனந்திரும்ப தேவன் எதிர்பார்க்கிறார். மனந்திரும்பாத வேளையில் நாம் நம்முடைய அறியாமையினாலே நம்முடைய ஆத்துமாவை இழக்க நேரிடும். பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான் என காண்கிறோம். ஆகையால் பூமியில் இருக்கக்கூடிய நாட்களில் கர்த்தருடைய வேதத்திற்கு நம்முடைய செவியை சாய்த்து, நாம் எதில் தவறியிருக்கிறோமோ அவைகளில் இருந்து விடுபட்டு கர்த்தருடைய வழியை பற்றிக்கொண்டு செயல்படவேண்டும்.

இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிற அன்பு உள்ளங்களே, கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது ஜீவவழியில் இருப்பீர்கள். தேவன் நம்முடைய நன்மைக்காகவே நம்மை கடிந்துகொள்ளுகிறார். நீங்களும் தவறான வழியில் செல்லக்கூடிய மக்களை பார்த்து கடிந்துகொள்ளுங்கள். நமக்கேன் வம்பு அது அவர்களுடைய பாடு என்று ஒதுங்கிப்போகாதிருங்கள். நாளைக்கு உங்களைப் பார்த்து அதே நபர் ஒருவார்த்தை எங்களுக்கு சொல்லியிருக்கலாமே, நாங்கள் எங்களை சரிசெய்திருப்போமே என்று சொல்லுவார்கள். ஆகையால் சமயம் உங்களுடைய வாழ்க்கையில் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், கடிந்து கொண்டு, கண்டம்பண்ணி, புத்திசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். கர்த்தர் உங்களிடத்தில் கணக்குக் கேட்பார்.

**புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் எவ்வழியில் இருப்பான்?**

மரணவழிக்கு விலகி ஜீவவழியில் இருப்பான் என்ற திருமறை நமக்குப்போதிக்கிறது. “புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவவழியில் இருக்கிறான்; கண்டனையை வெறுக்கிறவனோ மோசம்போகிறான்” (நீதி.10:17). கடிந்துகொள்ளுதலை ஒருவர் வெறுப்பாரேயானால் அவர் மோசம்போகிறார். கடிந்துகொள்ளும் போது அவருக்கு அது கசப்பாகவும், வெறுப்பாகவும் இருக்கும். ஆனால் நாட்கள் வரும்போது ஐயோ போதகத்தை வெறுத்தேனே, எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்குச் செவிகொடாமற்போனேனே என்று முறையிடுவார்கள். என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ மோசம்போவதை கர்த்தர் விரும்பவில்லை. ஆகையால், கடிந்துகொண்டு போதிக்கிறார். இந்த



ஆத்துமாக்களைக்கூட சத்தியத்தில் நிலைநிற்க விடாமல் நாவினால் பொய்யைக் கொடுத்து மனுஷரை இன்றுவரை கொன்றுவருகிறான். இது உண்மைதானே. என் அன்பு சகோதரனே, சகோதரிகளே இன்றைக்கு ஏன் சபைக்கு வரவில்லை என்றால் ஏதாகிலும் ஒரு பொய்யைச் சொல்லி விடுகிறோம். இப்படியே பல காரியங்களில் பொய்யைப்பேசி பிசாசானவனை தன்னுடைய பிதாவாக அநேகர் ஏற்றுக்கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவான் 1யோவா.3;8 இப்படி பொய் சொல்லி பாவத்தை கட்டிக்கொள்பவன் பிசாசின் தூதன். எபே.4;29 நாவில் கெட்டவார்த்தை பேசும் இரட்சிப்பு பெற்ற கிறிஸ்தவர்கள் வாயில் இருந்து வரக்கூடாது என்று ஆவியானவர் நமக்கு தெளிவாக சொல்கிறார். எனவே 1யோவா.3;8-ன் கடைசி வசனத்தின்படி பிசாசின் கிரியைகளை அழித்துப்போட தேவ குமாரன் கிறிஸ்து வெளிப்பட்டார். பாவத்தின் காரியங்களை அழித்து நீதிக்குரிய வாழ்க்கையை நாம் பெற்றுள்ளோம். எனவே 1யோவா.3:7-ன்படி பிள்ளைகளே ஒருவராலும் வஞ்சிக்கப்படாமல், இந்த வஞ்சனைக்கு நம்முடைய நாவை ஒப்புக்கொடாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்று 1தெச.5:17-ல் பவுல் சொல்வதுபோல இடைவிடாமல் ஜெபம் செய்து எல்லா நேரமும் நம்முடைய நாவினால் தேவனை ஸ்தோத்தரிப்போம். அப்பொழுது 1தெச.5:23-ன்படி சமாதானத்தின் தேவன் தாமே முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருப்பதாக. இவ்விதழ் முலம் வெளிவந்துள்ள இச்செய்தியை வாசித்து உங்கள் நாவை பொல்லாப்புக்கும், கபட்டு வசனிப்புக்கும், பொய்க்கும் விலக்கி காத்து கர்த்தருக்கு சித்தமானவைகளைச் செய்யவும், துதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும், வேதத்தை வாசிப்பதற்கும் உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்கள் அனைவரையும் தேவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

## ஜெபியுங்கள்

1. இம் மாதம் 26-28 வரை நடைபெறும் ரிட்ரீட்டுக்காக...
2. சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்ற சகோ: பஞ்சகிசோரிபேகேராவுக்காக...
3. இலங்கை ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
4. சபைக்கு உதவியாயிருக்கும் விசுவாசிகளுக்காக...
5. வேதாகம போட்டியில் கலந்துகொள்ளும் புதிய மாணவர்களுக்காக...
6. புதிய மாவட்ட ஊழியர்களுக்காக...
7. தமிழகத்திற்கு தேவன் கொடுத்த மழைக்காக...



**நடப்புச் செய்திகள்**

✦ தமிழகத்தில் 52,413 ஆசிரியர்கள் இந்த ஆண்டு நியமனம் செய்யப்படுவர் என முதல்வர் அறிவித்துள்ளார்.

✦ தமிழகத்தில் உள்ள பல கிராமங்கள் ஜாதிபெயரில் உள்ளன. இவைகளை மாற்றி தமிழ் பெயர்களை வைக்க அரசு தீர்மானித்துள்ளது.

✦ இந்தியாவின் ஆர்.டி.ஐ.,யைப் போல சீனாவிலும் தகவல் உரிமைச்சட்டம் கொண்டுவந்துள்ளது.

# நாவினில் பொய்வேண்டாம்

*-Yovan*



எனக்கு பிரியமான தி வேர்ட் ஆப் கிரைஸ்டின் வாசகர்களே, தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் அனைவரையும் மீண்டும் இந்த செய்தியின் மூலம் சந்திப்பதை நினைத்து தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன் இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் தான் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்று நினைப்பது சரிதான் ஆனால் ஆசீர்வாதம் முழுவதும் நமக்குள்ளாக இருக்கிறது அதை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நம்முடைய நாவு பொய்யை பேசாமல் மெய்யான வார்த்தைகளை பேசவேண்டும். இதைத்தான் வேதாகமத்தில் நீதி.21:6-ல் பொய் நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போல் இருக்கும் என்று சாலோன் ராஜா தெளிவாக சொல்லி உள்ளதை தியானித்துப்பாருங்கள். இன்றைக்கு அநேகர் பொய்யை பேசித்தான் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். இப்படியிருந்தால் தானாகவே சாவை தேடுகிறவர்களாயிருப்பார்கள். இதைத்தான் பக்தனாகிய தாவீது சங்.119:163-ல் சொல்லும்போது பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன் உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நம்முடைய வாழ்க்கையில் வேதத்தின்மீது நேசிக்கின்ற வாஞ்சை இருக்கவேண்டும். நமக்குள் வாஞ்சை இருந்தால் பக்தன் தாவீது சங்.119:165-ல் உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு அவர்களுக்கு இடறலில்லை. இந்த சமாதான வாழ்க்கையை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றால் சங்.34:13-ன்படி உன் நாவைப் பொல்லாப்புக்கு உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். இந்த நாவில் முதலில் வரும் பொல்லாப்பே பொய்தான். இதைத்தான் நீதிமொழி 6:17-ல் பொய் நாவு என்று சொல்லி கர்த்தருக்கு அருவருப்பான 7 காரியங்களில் நாவும் ஒன்று என்று சொல்லப்படுகிறது. நாம் பொய் நாவை விட்டு ஏசாயா 45:23-ன் படி தேவனை குறித்து அறிக்கை இடுகின்ற நாவை சரியாக பயன்படுத்துவோம். ஏனென்றால் நம்முடைய நாவில் தான் ஜீவன் உண்டு என்று நீதி.18:21-ல் வசனம் சொல்லுகிறது. மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.

ஒரு மனிதனுக்கு ஆசீர்வாதமே அவனுடைய நாவுதான், நாவால் நன்மையான காரியங்களை முதலில் செய்யவேண்டும். சங்.104:33-ன்படி நாம் உயிரோடிருக்குமளவும் நம் தேவனை பாடி நாம் இருக்கும் அளவும் அவரை துதிக்கவேண்டும். அடுத்தகாரியம் சங்.119:103-ல் தேவனுடைய வார்த்தையை நம்முடைய நாவில் கொண்டிருக்கவேண்டும். அப்பொழுது நம்முடைய நாவு பொய்க்கு விலகியிருக்கும். நம்முடைய இரட்சகர் யோவா.8:44-ல் பொய்யனும், பொய்க்குப்பிதாவுமாக பிசாசானவன் இருக்கிறான் என்றார். இவன் இரட்சிப்பு பெற்ற



கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானமுள்ள காது. சிலவேளைகளில் வசனத்தில் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று வாசிக்கிறோம். காது இருந்தும் தங்களுடைய காதை அடைத்துக்கொள்ளுகிறவர்களும் உண்டு எனவே காதுள்ளவன் கேட்கக்கடவன், என்பதால் எப்பொழுதும் கர்த்தருடைய வசனம் தொனித்துக்கொண்டிருக்கிறது. ஞானமுள்ள பிள்ளைகளைப்போல புத்திமதிகளை ஏற்று, ஜீவவழியே வழிநடக்கப் பிரயாசப்படுங்கள். நலமான காரியங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ கனமடைவான் - நீதி.13:18**

**வாசகர் கடிதம்...**

❶ பெண்களின் பகுதியில் ஒருமனப்பட்ட ஜெபம் என்பது ஒரே காரியத்தை கூடியிருக்கிற அனைவரும் மனதில் கொண்டு ஜெபிப்பதாகும் என்று கற்றுக் கொடுத்த சகோதரிக்கு நன்றி. ஊழியங்களுக்காக ஜெபிக்கிறோம். எங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். **பி.இந்திராபாண்டி, திருமங்கலம்.**

❷ கடவுளின் கிருபையால் கடவுளின் ஊழியத்தை செய்யும். உங்களை கடவுள் ஆசீர்வதிப்பாராக. நானும் ஒரு விசுவாசி. நான் தமிழன் டி.வி-யில் உங்கள் நிகழ்ச்சிகளை பார்த்து வருகிறேன். நீங்கள் வேதாகம கருத்துக்களை எங்களுக்கு எடுத்து சொல்வீர்கள். மன ஆறுதல் தருகிறது. மன பாரத்தோடு கஷ்டத்தோடு இருக்கும்போது நல்ல நிலத்தில் விழுந்த விதையைப்போல் மன ஆறுதல் தரும் வசனங்கள். எலியாவின் சால்வையைப் பற்றி எடுத்துக்கூறினீர்கள். நன்றி. ஒரே வழி, மாத இதழ் அனுப்பிவையுங்கள். **எஸ்.ராஜசுலோச்சனா, இறவாங்குடி.**

**இலங்கை ஆசியசேவை SW 25 மேற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும்** The Word of Christ **ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில்** www.slbc.lk **இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

**வேத அறிவுப்போட்டி எண் 132 –ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. T.ரெபேக்காள் - நாகமலை புதுக்கோட்டை | 12. Mrs.மெல்சிடா - திண்டுக்கல் |
| 2. Tmt.மரகதம்திரவியம் - கோம்பை | 13. J.நிர்மலாஜான் - மதுரை |
| 3. T.ராஜாத்தி - கோம்பை | 14. Mrs.ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ்- மதுரை |
| 4. E.டென்சிங்மனோகரன் - மதுரை | 15. K.மோகன் - குமாரபாளையம் |
| 5. Irn.எதிராசன் - சங்ககிரி | 16. Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி- திருச்சி |
| 6. Mrs.மெல்சிடா - திண்டுக்கல் | 17. V.F.சர்லோ - புதுச்சேரி |
| 7. M.ராமசந்திரன் - ஒட்டாநத்தம் | 18. Mrs.சரோஜினி - தாராபுரம் |
| 8. R.கிப்ட்ராஜாமணி - ஒட்டாநத்தம் | 19. P.இந்திராபாண்டி- திருமங்கலம் |
| 9. R.கஸ்தூரி - ஒட்டாநத்தம் | 20. ரூபி பிரகாஷ் - தாராபுரம் |
| 10. S.தேவகிருபை - மங்களம் கொம்பு | 21. பொன்னி விக்டர் - தாராபுரம் |
| 11. G.பூங்கோதை - வெள்ளப்பாளையம் | |

**வேத அறிவுப்போட்டி எண் 132 –ன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. தாவீது, மேவிபோசேத்தை | - 2சாமு.97 | 6. பிதாவை | -1யோ.2:23 |
| 2. பிரீதியாயிருக்கும் | - 1பேது.2:20 | 7. யோயாக்கீன் | - 2நாளா.36:9 |
| 3. எப்ரோன்7, எருசலேம் 33 | - 1இரா.2:11 | 8. யோவான் | - 2யோவா.3 |
| 4. மனுஷர், பிலேயாம் | - 2பேது.2:16 | 9. மூப்பர்கள் | - எஸ்றா 5:11 |
| 5. சிங்கங்களை | - 2இரா.17:25 | 10. தியோத்திரேப்பு | - 3யோவா.10 |

# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

## பாடம் -6 கொலைசெய்தல் - **Killing**

***J.C.Choate***




கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன்.

உலகத்தில் அநேக பாவங்கள் உள்ளன, மனிதன் எல்லாவற்றிற்காகவும் குற்ற உணர்வுள்ளவனாயிருக்கிறான். யாரோ ஒருவன் மட்டும் பாவங்களைச் செய்வதில்லை, ஆனால் ஒவ்வொருவரும் இவைகளில் ஏதோ சிலவற்றை செய்கின்றனர். ஆனபடியினால் எல்லாரும் பாவஞ்செய்கின்றனர், எனவே எல்லாருக்கும் இரட்சிப்பு அவசியமாயிருக்கிறது அல்லது அவர்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு தேவையாயிருக்கிறது. எப்படி பழைய மனிதனின் பாவத்தை களைந்துபோட்டு கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனை எப்படித் தரித்துக்கொள்ளுவது என்பதை உங்களுக்குக் காண்பிப்பது எங்களுடைய நோக்கமாயிருக்கிறது.

மனிதனுடைய எல்லா பாவங்களிலும், கொலை அல்லது ஒரு மனிதனை விரோதத்தினால் கொன்றுபோடுவதைக் காட்டிலும் அதிக கொடூரமானது வேறொன்றும் இல்லை. ஆனபடியினால், நம்முடைய இந்த பாடத்தில் நாம் கொலை செய்தல் பற்றி இப்போது படிக்கவிரும்புகிறோம்.

நான் நம்புகிறேன், நான் மற்ற மனிதனை கொலை செய்திருக்கிற எவனொருவனைப் பற்றியும் பேசவில்லை, ஆனால் நேர்மையான காரியத்தைச் செய்து கொண்டிருக்கலாம். நான் அப்படிச் செய்வேனென்றால் உறுதியாக உங்களுடைய நன்மைக்கென்று இதைக் கூறவேண்டியவனாயிருக்கிறேன். ஆனால் இந்தப் பாடம் இந்த பாவத்தை ஒருபோதும் செய்யாத உங்கள் யாவருக் காகவும் வடிவமைக்கப்பட்டது. நாம் இது குறித்து வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்ற விழிப்புணர்வைப் பெறும்படிக்கு விவாதிக்கப்போகிறோம். மேலும் அதன்படி செய்யப்போகிறோம். இது நமக்கு மரியாதைக் குரிய வாழ்வுக்கென்று உதவிசெய்ய வேண்டும். மேலும், இப்படிப்பட்டவை ஒருபோதும் குற்ற உணர்வை உருவாக்கக் கூடாது என ஜெபிக்கிறேன்.

கொலை செய்தல் அல்லது விரோதத்தினால் கொன்று போடுதல் போன்ற செயல்களுக்கு பல காரணங்கள் இருக்கிறது. சிலர் பணத்திற்காக ஏனென்றால் பொறாமையினிமித்தம், பழிவாங்கத் தேடுதலினிமித்தம், வெறுத்ததலினிமித்தம், தொடர்ச்சியான வாக்குவாதத்தினிமித்தம், குடிப்பதற்குப் பழகி அப்படியே ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக பட்டியல் கூடிக்கொண்டே செல்லுவதினால் கொலை



கொஞ்ச காலத்தையே பெற்றிருக்கிறீர்கள், எனவே தேவன் அவன் எவ்விதமான புயலைச்சந்தித்தாலும் வாழ்நாள் முழுவதும் அவனுடைய அடைக்கலமாயிருக்கிறார்.


அடிக்கடி, ஒரு குழந்தையைப் பயிற்றுவிப்பதில், ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான உலகத்திற்கிடையில் குழப்பங்கள் இருக்கும். ஞாயிற்றுக் கிழமையில் கிரிக்கெட் போட்டி அல்லது ஆராதனைக்குச் செல்லுவதை தெரிந்துகொள்ளுவதா என்ற குழப்பம் ஏற்படலாம். சமீபத்தில் ஒரு இளைஞன் தான் குழந்தையாயிருந்த போது ஆராதனையைப் பற்றி தன்னுடைய தகப்பனுடைய கண்டிப்பினையும் அவர்கள் ஒருபோதும் கூட்டத்திற்குக் காலதாமதமாய் செல்லக்கூடாது என்பதற்காக அவர்கள் தீட்டிய காலை நேரத்திட்டத்தைக் குறித்தும் கூட தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இளைஞனாக, தன் விருப்பத்தின்படி தீர்மானங்களை உருவாக்குகின்றவனாக, “இப்போது என் தகப்பன் எனக்கு ஒரு ஆன்மீக உணவளிப்பவராக இருக்கிறார்” என்று சொன்னான்.

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஒழுக்கமும், கவனமுள்ள போதனையும் இப்போதைக்கு தேவையில்லை எனத் தீர்மானித்திருப்பீர்களானால், தயவுசெய்து இக்காரியங்கள் எல்லாவற்றையும் நன்கு யோசித்துப் பாருங்கள். “எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்” (எபி.12:11).

**The 2nd World Evangelism Retreat** இதில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களுடைய சொந்த செலவில் கலந்துகொள்ளலாம். உணவுக்கு மட்டும் ரூ200/- செலுத்தி உங்களுடைய பெயரை இம்மாதம் 20-ம் தேதிக்குள் பதிவு செய்துகொள்ளவும். தங்குமிடம், பயணசெலவு உங்களுடையது.

*Place: Woodlands,Thekkady Road, Kumily -685 509, Idukky DT KERALA.*

Date
Sep.26,27and 28th 2011.
Cell:9443558041
By
The Word of Christ
அனுமதி பெற்று வரவும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.




அட்டைப் பகுதியில் பின்புறம் உள்ள **கிறிஸ்துவின் வசனம்** டி.வி நிகழ்ச்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது. **தமிழன் டிவியில்** ஒவ்வொரு திங்கள் காலை 6.00 மணிக்கும் மற்றும் சனிக்கிழமை மாலை 6.15 மணிக்கும் நிகழ்ச்சிகள் வெளிவருகிறது.

வழிமுறைகள்:

▶ வேண்டுகோலுக்கு உத்தரவு சொல்லும் முன் அல்லது ஆம் அல்லது இல்லை என சொல்லும் முன், அதை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் செய்யப்போகிற காரியம் போதுமான அளவுக்கு முக்கியமானதாகயிருந்தால் நின்று நிதானியுங்கள்.

▶ ஆனால் நீங்கள் சிலவற்றைக்கூறினால், அதை நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள். இதுவே உங்கள் குழந்தை ஒழுக்கத்தின் பாதுகாப்பான எல்லைகளைக் கற்றுக் கொள்ள ஏதுவான வழியாகும். நீங்கள் அவனுடைய வழிகாட்டி, மேலும் நீங்கள் உங்களுடைய பொறுப்பினைக்குறித்து ஆழ்ந்த யோசனையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவன் உட்காரவோ அல்லது மௌனமா யிருக்கவோ தேவவையில்லையென்றால், அதைச் செய்யும்படி சொல்லாதீர்கள். ஆனால் நீங்கள் அதைச் செய்யும்படி சொன்னால், அதற்குக் கீழ்ப்படியாமலிருக்க அனுமதிக்காதீர்கள்.

▶ கீழ்ப்படிதலுக்கு பாராட்டுதலோடு, அன்போடு, ஏற்றுக்கொள்ளுதலோடு சன்மானம் கொடுங்கள். கீழ்ப்படியாமைக்கு வேறுபட்ட திருத்தத்தோடும் தண்டனையோடும் கைமாறுசெய்யுங்கள். அவைகள் இவ்விதமாக இருக்கலாம் (1) வாய்மொழி திருத்தம் (2) சில உபகாரங்கள் அல்லது பொம்மை போன்றவற்றிற்கு மறுப்பு தெரிவித்தல் (3) அவன் கீழ்ப்படியத் தீர்மானிக்கும் வரை நாற்காலியில் அமரச்செய்தல் அல்லது தனியாக ஓரிடத்தில் நிற்கச்செய்தல் (4) கட்டுப்பாடோடே கையினால் அடித்தல் முறையில் சரீரப்பிரகாரமான தண்டனை அல்லது வேறு எந்தமுறையிலாவது உங்கள் குழந்தைகளைத் தண்டித்தல்.

▶ உங்களுடைய குழந்தையின் ''கொச்சையான'' கோமாளித்தனங்ககளைப் பார்த்து சிரிக்காதீர்கள் அவைகள் உண்மையாகவே கீழ்ப்படியாமையான செயல்கள். அவைகள் சரிசெய்யப்படவேண்டியவை. பெற்றோர்களின் ஒரு சிறிய முன் எச்சரிக்கை பல ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு உதவும். ஒரு சிறுகுழந்தை தன்னைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்த பாட்டியின் முகத்தை அடித்துக் கொண்டேயிருந்த அந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அந்த முதியவள், அவள் ஒரு சின்ன குழந்தைதான் உண்மையாகவே அவள் தீங்கு செய்யவில்லை என அறிந்து கொண்டவளாய் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தக் குழந்தையின் தகப்பன் வேகமாய் வந்து அக்குழந்தையின் கையைப்பிடித்து எந்த புன்முறுவலையும் காண்பிக்காது மிகவும் கண்டிப்பாக செய்யாதே எனக் கூறினார். மேலும் அவர் '' நான் சிரித்தால்'' ''அவள் இது ஒரு விளையாட்டு என நினைப்பாள்'' மேலும் இது மற்றவர்களை அடிப்பது அவளுக்கு சரியான செயலாகத் தோன்றும். அந்தச் செயலில் அவள் வளருவதை நான் விரும்பவில்லை, மேலும் அவள் அதைச் செய்யாதபடிக்கு காலஞ்சென்ற பிறகு நான் போதிக்கிறவனாக இருக்கவிரும்பவில்லை என்று விளக்கினார். எப்பேர்பட்ட ஞானமுடைவர் அவர்!

▶ குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு குழந்தையை ஆவிக்குரிய காரியத்திலும் தேவனோடு ஐக்கியங்கொள்ளவும் பயிற்றுவிக்கத் தொடங்குங்கள் நாள் முழுவதும் வாழ்வின் ஒவ்வொரு நாள் காரியங்களும் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து வருகிற நம்முடைய அன்பின் தேவனுக்குரியது. அவனுக்கு வேதவாக்கியங்களைக் கற்றுக்கொடுங்கள், அவன் வேதபாடவகுப்புகளில் ஒழுங்காகப் பங்கேற்கிறானா எனக் கவனியுங்கள். இதுவே அவன் தேவன் மேல் தன் வாழ்வை அஸ்திபாரமிட்டு வளர்ச்சியடைவதற்கு அவனுடைய நினைவில் நீங்கள் உருவாக்குகிற இயல்பான அடித்தளமாகும். நீங்கள் அவனுடைய இருதயத்தில் இந்த சத்தியங்களை நிலைநாட்ட



செய்கின்றனர்.

வேதாகமம், ஒரு மனிதன் கோபம் ஏற்பட்டபடியால் தன் சொந்த சகோதரனையே கொலை செய்த முதல் கொலையைப் பற்றி நமக்குக் கூறுகிறது. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இந்த இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் என்பது நமக்குத்தெரியும். இந்த வேதவாக்கியம் தொடர்ந்து, "பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் கர்த்தர் அங்கிகரித்தார். காயீனையும் அவன் காணிக்கைகளையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான். கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. இப்பொழுதும் உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ளத் தன் வாயைத் திறந்த இந்தப்பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போதும், அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. இன்ற என்னை இந்த தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப்போட்டார்" (ஆதி.4:2-16)என கூறுகிறது. எபிரெயர்11:4-ல் நாம் "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" இவ்வாறு வாசிக்கிறோம். இந்தக் கூற்றிலிருந்து தேவன் ஆபேல் மற்றும் காயீனுடன் அவர்கள் ஏறெடுத்த பலிகளின் தன்மையைக் குறித்து பேசியிருக்கிறார் என முடிவுக்கு வரமுடிகிறது.

பெண்கள் பகுதி

# புத்தியுள்ள ஸ்திரீ

## A Wise Woman

*-Glory Arjunan*




ஒரு புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுவாள் என வேதம் கூறுகிறது. குடும்பமாகிய வீடு கட்டப்பட வேண்டுமானால் அது ஒரு புத்தியுள்ள ஸ்திரீயினால் மட்டுமே கூடும். அன்பு சகோதரியே, உங்கள் குடும்பம் எப்படியுள்ளது? என்ன வந்தாலும் அசைக்கப்படமுடியாத கன்மலை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட குடும்பமாக உள்ளதா? அல்லது இடிந்து சின்னாபின்னமாக கிடக்கும் ஒரு கட்டடத்தைப் போல் ஆளுக்கொரு பக்கமாக சிதறிப்போய் கணவன் ஒரு வழியிலும், மகன் இன்னொருவழியிலும் மகள் மற்றொரு வழியிலும் மனம் போல் வாழ்வு என நாட்களைக் கழிக்கின்ற குடும்பத்தைப்போலிருக்கிறதா? சகோதரியே, நம் குடும்பம் நோவாவின் குடும்பத்தைப் போல் ஒரே பேழையில் பயணம் செய்து நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கூட தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டால் அத்துடன் திருப்தியடைந்தவர்களாகவோ அல்லது தன் குடும்ப அங்கத்தினர்கள் குறித்து கவலையற்றவர்களாகவோ இருந்து விடுகின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தம் நம்மை பாவமறக்கழுவி சுத்திகரித்து நமக்கு ராஜமேன்மையைக் கொடுத்திருக்கிறது. ‘‘நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்’’ (1பேது.2:9) என வேதம் கூறுகிறது.

யூதர்கள் அழிவின் விளிம்பில் இருந்தபோது மொர்தெகாய் எஸ்தருக்கு அதைத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும், மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான் (எஸ்.4:8). அன்று யூதர்களுக்கு நியமிக்கப்பட்டது சரீர அழிவு. அந்த அழிவிலிருந்து யூதர்கள் காக்கப்பட வேண்டுமென எஸ்தர் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டியவளாக இருந்தாள். மேலும் மொர்தெகாய் எஸ்தருக்கு, ‘‘நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத்தெரியும், என்று சொல்லச் சொன்னான்’’ (எஸ்.4:14).

ஆனால் இன்று, ‘‘தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற



போலவுமிருக்க வேண்டிய ஒன்றாகக் காட்டுகிறது.

நீதிமொழிகள் 22:6, ‘‘பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்’’ என வாக்களிக்கிறது.

ஆனால் இளம் பெற்றோர்கள் அதிகமாக அடிக்கடி குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில்லை! குழந்தைகள் வடிவமைக்கப்படுவதும், பயிற்றுவிக்கப்படுவதும் பெற்றோர்களால் தொடர்ந்து முன்நோக்கி நடைபெற வேண்டியதாயிருக்கிறது, மேலும் அவர்கள் அவர்களை வளர்ச்சியடையப்பண்ணுவதில் ஒருபோதும் அமைதியாயிருக்கக் கூடாது. ஒருவேளை அவர்கள் என்ன செய்யவேண்டுமென உறுதியில்லாதவர்களாய் இருக்கலாம். ஒருவேளை அவர்கள் மிகவும் கடுமையாயிருப்பதில் அச்சம் கொள்ளலாம், தங்களுடைய இளங்குழந்தையை இழிவுபடுத்துவதாகத் தோன்றலாம். ஒருவேளை அவர்கள் அவன் இப்போது புரிந்து கொள்ளுவதற்கு மிகவும் சிறியவனாயிருக்கிறான், மேலும் அவன் பெரியவனாகும் போது எப்படி நடந்துகொள்ளவேண்டுமென அவனுக்கு தாங்கள் போதித்துக் கொள்ளலாம் என தவறான தீர்மானத்தை உருவாக்கினவர்களாய் இருக்கலாம்.

இப்படிக் காத்திருப்பது பெற்றோரின் வேலையை மிக அதிகமாகக் கடினப்படுத்தும். ஒரு முரட்டாட்டம் பண்ணும், கூச்சலிடும், ஒழுங்கீனமான குழந்தை பெற்றோர்களுக்கு வெறுப்பூட்டுகிற குழந்தையாகயிருக்கும், வழக்கமாக பார்ப்பவர்களும் அவனுடைய நடத்தையை விரும்பமாட்டார்கள். மற்றபெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் மேல் இவனுடைய செல்வாக்கிருப்பதைக்குறித்து தங்களுடைய குழந்தைகள் இந்த தொந்தரவுக்குள்ளாகிவிடுவார்களென ஆத்திரமடையலாம். குழந்தை வளர்ந்து வருகையில், அவனுடைய நடவடிக்கை மோசமாகயிருந்தால் மற்றவர்கள் அவனோடிருக்க விரும்பமாட்டார்கள், அவன் அவர்களுடைய மனநிலையை அறிந்து, அதனால் வேதனையடைவான், இருந்தபோதும் அவன் மற்றவர்கள் தன்னை ஒதுக்குவதற்கான காரணத்தைப்புரிந்து கொள்ளாமலிருக்கலாம். இது சின்ன தொந்தரவு கொடுக்கிறவனாக வளர்ந்து வருவதிலிருந்து தங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவது பெற்றோருடைய கடமையாகயிருக்கிறது. அந்த குழந்தை ‘குற்றஞ்சாட்டப்பட்டு’ புறக்கணிக்கப்பட்டவனாயிருந்தாலும், இது அவனை நேசிக்கப்படாத, அருவருப்பான ஒருவனாக வளர அனுமதித்த பெற்றோரையே சாரும்.

உங்களுடைய குழந்தையைப் பயிற்றுவிப்பதில் கண்டிப்பில்லாத பழக்கத்தைக் கொண்டிருந்தீர்களானால், உங்களுடைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். பெற்றோராக நீங்கள் செய்கின்ற வேலை உங்கள் வாழ்வில் மிக முக்கியமானதாக இருக்கிறது! இதை அற்பமாய் எண்ணாதீர்கள் அல்லது அதற்கு அதிகமான நாட்கள் உண்டு என நினைக்காதீர்கள். பல பாடங்களினூடே நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு நாளினுடைய மிகமுக்கியமான தேவையாகும். நீங்கள் மதிப்புமிகுந்த சின்ன ஆத்துமாவை உலகிற்கு ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கு வடிவமைப்பதற்கு குறைந்த வருடங்களையே பெற்றுள்ளீர்கள்.

நீங்கள் வருங்கால ஒரு தகப்பனை அல்லது ஒரு தாயைப் பயிற்றுவிக்கின்றீர்கள் என்பதை நினைக்க வேண்டும், மேலும் நீங்கள் உங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் முறையே அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கு அடித்தளமாயிருக்கும்.

இவைகள் உங்கள் மனதில் கொள்ள வேண்டிய பயிற்றுவிப்பதற்கான

## பெண்கள் பகுதி

# ஒருவருடைய குழந்தைகளைப் பயிற்று விப்பதற்கும் நல்லொழுக்கப்படுத்துவதற் குமான தீர்மானமின்மை

# The Decision Not Train and Disciline one`s Children

***-Betty***



இனங்களின் விருத்தி என்பது இயற்கையான ஒன்றும் உயிர்வாழ்வனவற்றின் முக்கியப் பகுதியாகவுமிருக்கிறது. இதைப் பற்றி சிறிது ஆராய்ந்து பேசுவது அவசியம். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட முதல் கட்டளை, "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி....." (ஆதி.1:28) என்பதாகும்.

ஜனங்கள் பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றனர். சில நேரங்களில் பெற்றோர்கள் இருவரும் கவனத்துடன் நிகழ்ச்சியின் நேரத்தைத் திட்டமிட்டு, எண்ணிக்கையுள்ள பிள்ளைகளுக்கு கொடுக்கவும், தங்கள் பிள்ளைகளின் சரீரம், மனவெழுச்சி, மற்றும் ஆவிக்குரிய தேவைகளில் கவனம் செலுத்தும்படிக்கும் அவர்கள் ஆயத்தம் செய்ய வேண்டுமெனவும் அறிந்திருக்கிறார்கள்.

ஆனால் பெற்றோர்களின் சார்பில் சம்பந்தமில்லாமலும் முன் எச்சரிக்கையில்லாமலும் உலகில் அடிக்கடி குழந்தைகள் பிறக்கின்றன. அவர்கள், சிறிதளவு பெற்றுக்கொண்டு பசியின் விளிம்பிலும் அல்லது கல்வி இல்லாமலும் வாழ்கின்றனர். மேலும், இவ்வுலகத்திலும்கூட அவர்கள் முன்னேற்றத்திற்கான தங்களுடைய விதியில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர், வரப்போகிற ஆவிக்குரிய நித்திய உலகில் மிகக் குறைவாகவே காணப்படுவார்கள்.

பெற்றோர்கள் உலகத்திற்குள் தாங்கள் கொண்டுவந்த உதவியற்ற சிறுபிள்ளைகளுக்கானப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும். தீமோத்தேயு5:8, "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" எனக் கூறுகிறது.

ஆனால் பிள்ளைகளுடைய சரீரத் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்வதைக் காட்டிலும் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதில் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றன. தொடர்ச்சியான போதனையும் பயிற்சியும் அவசியம், ஞானத்துடனும் அன்புடனும் உருவாக்கப்படவேண்டியதும், வயதான ஒருவருடைய தரிசனம். மேலும் குழந்தையாயிருக்கின்றவனை களிமண்ணிலிருந்து உருவாகின்ற ஒன்றைப்



அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது ..... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (1தெச.1:7-10) என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரிகளே, அன்று அந்த புத்தியுள்ள எஸ்தர், நான் செத்தாலும் சாகிறேன் எனக் கூறி ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணி, மன்றாடி யூதருக்கு விடுதலையும், களிப்பும், மகிழ்ச்சியும் உண்டாகப்பண்ணினாள். யூதருக்கு வெளிச்சமும், விடுதலையும் உண்டாகும்படி ராஜமேன்மை அவளுக்குக் கிடைத்திருந்தது. இன்று நமக்கோ ஆவிக்குரிய ராஜமேன்மை கிடைத்துள்ளது. இந்த ராஜமேன்மை நம்முடைய குடும்பத்தாரின் வெளிச்சத்திற்கும், விடுதலைக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாயிருக்கக் கூடாதா?. 1தெச.1:7-10-ல் கூறப்பட்டுள்ளபடி தேவனை அறியாத நம்முடைய குடும்பத்தாரை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமானவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவதும், மன்றாடுவதும் மிகவும் அவசியமல்லவா? அன்பு சகோதரியே, உங்கள் கணவனின் இரட்சிப்பைக்குறித்தும், பிள்ளைகளின் இரட்சிப்பைக் குறித்தும் கவலையற்றவர்களாய் இருக்க வேண்டாம். ஐயோ, இரட்சிப்பைக் குறித்து பேசினாலே வீட்டில் ரகளை தான் ஏற்படும் என்கிறீர்களா? தேவசமூகத்தில் தரித்திருந்து வேதாகமத்தின் மூலம் கர்த்தரிடத்திலிருந்து வரும் அறிவையும் புத்தியையும் பெற்றுக் கொண்டு குடும்பத்தைக் கட்ட ஆரம்பியுங்கள். உங்கள் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை உங்கள் கணவர் பார்த்து போதனையின்றி உங்கள் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார் (1பேது.3:1,2). தேவவசனம் தூஷிப்பப்படாதபடிக்கு உங்கள் புருஷரிடத்திலும், உங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவராகவும், தெளிந்த புத்தியுள்ளவராகவும், கற்புள்ளவராகவும், வீட்டில் தரித்திருக்கிறவராகவும், நல்லவராகவும், உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவராகவுமிருங்கள் (தீத்.2:4,5). இப்படி நடந்து கொள்ளும்போது தேவன் உங்களுக்கு உதவிசெய்வார். நீங்களும் புத்தியாய் உங்கள் குடும்பத்தை கிறிஸ்துவாகிய பேழையில் ஏறப்பண்ணுவீர்கள். எஸ்தரைப்போல துணிச்சல் கொண்டு, "நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி.4:6,7).

இதோ, கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். "...... கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). எனவே நம்முடைய குடும்பத்தைக் குறித்து பாரமுள்ளவர்களாய் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுவோம். "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது ........." (கொரி.7:10) என வேதம் கூறுகிறது.

ராஜமேன்மையைப் பெற்றுள்ள நாம், சிலர் கவலையற்றவர்களாயிருப்பது போல நாமும் இல்லாதபடி நம்முடைய குடும்பத்தாரை, நம் ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், விடுதலையும் உண்டாக ஆத்தும பாரங்கொண்டு

நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமாயிருக்கிறவரை நோக்கி, மன்றாடுவோம். வேதம் நம்மில் எதிர்பார்க்கிறபடி புத்தியாய் கிரியை நடப்பிப்போம். நம்முடைய விசுவாசத்தின் கிரியைகளைக் கர்த்தர் பார்த்து நம்முடைய குடும்பம் கட்டப்படவும் கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் குடும்பத்தார் அனைவரும் சேர்க்கப்பட்டு நித்திய அழிவிலிருந்து காக்கப்படவும் உதவிசெய்வாராக!.

### பொது அறிவுச் சோதனை

1. முதன் முதலாக எய்ட்ஸ் கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு எது?
   அ)1981 ஆ)1982 இ)1980
2. அதிகப்படியான கொலஸ்ட்ராலின் விளைவு என்ன?
   அ)காச நோய் ஆ)அதிரோஸ்லிராஸிஸ் நோய் இ)வாத நோய்
3. தண்டி யாத்திரையுடன் தொடர்புடையது எது?
   அ)ஒத்துழையாமை இயக்கம் ஆ)வெள்ளையனே வெளியேறு இ)சட்ட மறுப்பு இயக்கம்
4. ஜப்பானில் எறியப்பட்ட முதல் அணுகுண்டின் பெயர் என்ன?
   அ)லிட்டில் பாய் ஆ)குட்– பை இ)பேபி
5. உலக வங்கி இருக்கும் இடம் எது?
   அ)நியூயார்க் ஆ)வாஷிங்டன் இ)இங்கிலாந்து

விடைகள்: 1.1981
2.அதிரோஸ்லிராஸிஸ் நோய்
3.சட்ட மறுப்பு இயக்கம்
4.லிட்டில் பாய் 5.வாஷிங்டன்

# தேவன் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார்



பிரிவினையானது மிக கொடிய நோய்போன்றது. ஆனால் நோய்க்கு மருந்து இல்லாமற்போகலாம். பிரிவினையை முறியடிக்க ஏற்ற மருந்து பரிசுத்த வேதாகமத்தில் உண்டு. "பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான்" (நீதி.18:1). பிரிவினையைக் கர்த்தர் அனுமதிக்கிறதில்லை. ஏனென்றால் "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" (1கொரி.1:13) ஆனால் நம்மில் அநேகர் நான் அந்த ஊழியனைச்சார்ந்தவன் அந்த குரூப்பில் சேர்ந்து ஊழியஞ்செய்கிறேன். உங்களோடு பேசினால் என்னை அவர்கள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் என்பார்கள். அந்தியோகியாவில் உள்ள சீஷர்களுக்கு முதல் முதல் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இப்பெயர் வழங்கப்பட்டபோது நான் பவுலை சேர்ந்தவன் என்றோ அல்லது நான் பேதுருவை சேர்ந்தவன் என்றோ ஒருவரும் சொல்லவில்லை எல்லோரும் கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களாகயிருந்தார்கள். இன்றும் நம் ஆண்டவர் நமக்கு போதிக்கும் வசனம் இதுதான் "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்: ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவா.12:26). நீங்கள் இயேசுவைப் பின்பற்றினால் உங்களுக்குள்ளே பிரிவினை ஆவியும் இருக்காது, பிரிவினை சபையும் இருக்காது.



ஆண்டவர் ஜெபிக்கும்போது "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவா.17:22) என்கிறார். தேவன் பிரிந்து இருக்கவில்லை. பிதா குமாரன் பரிசுத்தஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். தேவன் தம்முடைய சித்தத்தை குமாரன் மூலமாகவும் பரிசுத்தஆவியானவர் மூலமாகவும் வெளிப்படுத்து கிறார். கிறிஸ்துவானவர் உயிர்த்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என பார்க்கிறோம். அந்த நித்தியத்தில் வாழப்போகும் நாம் பிரிவினையோடு இருந்தால் எப்படி? தாவீது ராஜா பாடும்போது "இதோ, சகோதரர் ஒருமித்துவாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்.133:1) என்று பாடுகிறார். உண்மைதான் ஒருமித்து வாசம்பண்ணுகிறது மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

பிரிவினைக்கு மூலகாரணமாயிருப்பது பகை. "தன் சகோதரனைப்பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது" (1யோவா.3:15). கொலை என்பது கொடூரமான செயல். இதைக்குறித்து கர்த்தர் குறிப்பிடும் போது, "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக் கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" (மத்.5:21,22)என்று கர்த்தர் உரைக்கிறார். முன்னே கொலை செய்தால் தான் குற்றம் ஆனால் தற்போது நியாயமில்லாமல் கோபித்துக்கொண்டாலே குற்றம் என்று வாசிக்கின்றோம். இப்படியிருக்க நாம் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்வதோ, மூடன் என்று சொல்லுகிறதோ மாபெரும் தவறாக இருக்கிறது. மேலும் " தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?" (1யோவா.4:20). இங்கே தன் சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யன் என திருமறை விளக்குகிறது. திருமறை ஒருக்காலும் பொய்யுரையாது என்பது நாம் அறிந்த உண்மை. ஆக சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யனாயிருக்கிறான் அவனுக்குள் சத்தியம் இல்லை. சத்தியம் இருக்குமேயானால் பொல்லாங்கனுக்குள், அதாவது முழுவதும் பாவத்தில் கிடக்கும் பாவியை கிறிஸ்துவானவர் எப்படி மன்னித்து ஏற்றுக்கொள்கிறாரோ, அதே சிந்தை அவனுக்குள்ளும் இருக்கும்.

தேவ சமூகத்தில் காணிக்கை செலுத்த வரும்போது "உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத்.5:23,24). கர்த்தர் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து என்கிறார். இவ்வசனத்தை யாருக்கோ சொன்னதுபோல அனேகர் எடுத்துக்கொண்டு மெத்தனமாக இருந்து விடுகின்றனர். "இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" (ரோம.14:10). தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும். கர்த்தர் சொன்ன காரியங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது நமது கடமை. அதைவிடுத்து அதற்கு வியாக்கியானம் கொடுத்துக்கொண்டு காலத்தை தள்ளுவோமானால் நியாயத்தீர்ப்புக்கு எப்படி தப்புவோம்? அவருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.